# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.134/2016 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.5 |
| Name : | | **ரவி** |
| Father's/Husband Name: | | **சிவன்** |
| Village : | | **சிவன் காலணி, கீழப்பலூர்** |
| Taluk : | | **பெரம்பலூர்** |
| Age : | | 45 /2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.12.2021

**முதல் விசாரணை**

நான் கிழப்பலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்கிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. சுமார் 5,6 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 11 முதல் 11.30 இருக்கும். மகளிர் காவல் நிலையத்தில் இருந்து அதிகாரிகள் எனக்கு அருகே உள்ள வீட்டிற்கு (சம்பவம் குறித்து) வரைபடம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். அதில் என்ன விவரம் என்று எனக்கு தெரியாது. அதில் நான் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜரில் உள்ள என்னுடைய கையெழுத்து அ.த.சா.ஆ.4 ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரிக்கவில்லை. இந்த வழக்கைப்பற்றி தெரியுமா என்றால் தெரியாது. பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | | |
|---|---|---|
| Calendar<br>Miscellaneous<br>preliminary Register<br>Sessions | :<br>:<br>:<br>: | CC. No.134/2016 |
| DEPOSITION OF WITNESS for | Prosecution<br>Defence<br>Court | அ.சா.6 |
| Name : | | காமராஜ் |
| Father's/Husband Name: | | சஞ்சீவி |
| Village : | | சஞ்சீவி நகர், எளம்பலூர், |
| Taluk : | | பெரம்பலூர் |
| Age : | | 46/2021 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 14.12.2021

**முதல் விசாரணை**

நான் எளம்பலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜயில்லை. அவர்களை எனக்கு தெரியும். புகார்தாரர் எனக்கு தெரியும். அவர் எனது தம்பி. 2006 ஆம் ஆண்டு புகார்தாரர் ஆன எனது தம்பி 1ம் எதிரியாகிய தேவியை கோவிலில் திருமணம் செய்துகொண்டார். இரண்டுபேரும் 21/2 வருடம் சேர்ந்து வாழ்ந்தார்கள். அவகளுக்கு சுவேதா என்ற பெண்குழந்தை உள்ளது. திருமணம் ஆகி ஒரு வருடம் கழித்து எனது தம்பி வெளிநாட்டிற்கு வேலைக்கு சென்றுவிட்டார். அப்பொழுது எதிரி தேவி அவரது அம்மா வீட்டில் இருந்தார். அப்பொழுது எங்களது அம்மாவும் நானும் சென்று அடிக்கடி பார்த்து வருவோம், எனது அம்மா எதிரி தேவி வீட்டில் சில நாட்கள் தங்கி வருவார். அந்த நிலையில் எதிரி தேவிக்கு கிருஷ்ணமூர்த்தி என்பவருடன் பழக்கம் எற்பட்டது எனக்கும் எனது அம்மாவிற்கு தெரியவந்தது. எனது தம்பி வெளிநாட்டில் இருக்கும் பொழுது சம்பாறித்த பணத்தை அனைத்தும் தனது மனைவியான எதிரி தேவிக்கு அனுப்பிவைத்தார். அந்த பணத்தில் எதிரி தேவி சிலோன் காலணியில் 9 சென்டு இடம் வாங்கினார். அப்போது நான் எனது அம்மா எதிரி தேவி மற்றும் அவரது சகோதரி ஆகியோர் உடன் இருந்தோம். அந்த நிலத்தை எதிரி தேவியின் பெயரில் எனது தம்பி எழுதிவைத்தார். பின்னர் எதிரி தேவி கிருஷ்ணமூர்த்தி உடன் ஓடிபோய்விட்டார். இது சம்மந்தமாக எனது தம்பி அவர் மீது புகார் கொடுத்தார். மேலும் எனது தம்பி சம்பாதித்து வாங்கிய இடத்தை அவருக்கு திருப்பி கொடுக்காமல் ஏமாற்றிவிட்டார். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். முதல் விசாரணையில் சொன்னதைதான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். அப்பா என்னிடமும்

எனது அம்மா எனது தம்பியுடனும் இருந்தார்கள் என்றால் இல்லை. எதிரிகள் கள்ளத்தொடர்பில் இருந்தது எனக்கு நேரடியாக தெரியும். போட்டோ எதுவும் போலிசாரிடம் நான் கொடுக்கவில்லை. நானும் அம்மாவும் எதிரிகளுக்கும் கள்ளத்தொடர்பு இருந்தது பற்றி எனது தம்பியிடம் எந்த தேதியில் சொன்னேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை. சம்பவம் புறத்தாக்குடி, திருச்சி மாவட்டத்தில் நடந்தது என்றால் சரிதான். 1ம் எதிரி தேவி 2ம் எதிரியை துணி தைப்பதாக சொல்லி வீட்டை வீட்டு வெளியேசென்று அடிக்கடி பார்த்துவந்தார் என்பது எனக்கு நேரடியாக தெரியும் என்றால் தெரியாது. எனது தம்பி திருமணம் ஆகி ஒரு வருடத்தில் வெளிநாடு போனார். எனது தம்பி மனைவி அதற்கு பிறகு புறத்தாக்குடியில் அவரது அம்மா வீட்டில் இருந்தார் என்றால் சரிதான். அப்போது அவரை பார்க்க நான் போவேன் என்றால் சரிதான். தம்பி மனைவியுடன் தவறாக நடந்து கொண்டதால் என்னை எதிரி தேவி கண்டித்தார் என்றும் உன்னை இரு பார்த்துகொள்கிறேன் என்று சொல்லி என் தம்பியிடம் ஒன்றுக்கு இரண்டாக சொன்னேன் என்றால் சரியல்ல. நான் கள்ளத்தொடர்பு பற்றி தம்பியிடம் சொன்னேன் என்றும் நான் சொன்னதை எனது தம்பி ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. தம்பி எப்போது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. நான் என் தம்பிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 19.10.2010ம் மகளிர் காவல் நிலையத்தில் எனது தம்பி புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரியை போலிசார் அழைத்து விசாரணை செய்த விவரம் எனக்கு தெரியும். அந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.